2002 ஏப்ரல் 18]

துறையின் பராமரிப்பில் உள்ள ஏரியாகும். இந்த ஏரியின் மொத்தப் பரப்பு 413.73 ஏக்கராகும். இதில் ஆக்கிரமிக்கப்பட்ட பரப்பு 30 ஏக்கர். 1997-1998 ஆம் ஆண்டில் ரூபாய் 2 இலட்சம் மதிப்பீட்டில் சுமார் 4 ஏக்கர் நிலங்களில் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டுள்ளது. மீதமுள்ள 26 ஏக்கர் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில் கரும்பு, நெல் பயிர் செய்யப்பட்டு அவை அகற்றப்படாமல் உள்ளன. வருவாய்த் துறையின் துணையுடன் அந்த ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பகுதி அகற்றப்படும் என்பதையும், போதுமான நிதியொதுக்கீடு இன்மையால் தூர்வாரும் பணியைச் செய்ய இயலவில்லை. ஏரியைத் தூர்வாருவதற்கும், கரையைப் பலப்படுத்தி அதன் மேல் கிராவல் பரப்புவதற்கும் தோராயமாக ரூபாய் 50 இலட்சம் செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளது. சிறப்பு நிதியொதுக்கீடு கிடைக்கப்பெற்றால் மேற்கண்ட பணியைச் செய்து முடிக்க இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 156, திரு. ப. இராஜரெத்தினம், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.

156—

அணை கட்டுதல்

***970—திரு ப. இராஜரெத்தினம்**:

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் தொகுதி, வேப்பந்தட்டை ஒன்றியம், மலையாளப்பட்டியில் சின்னமுட்லு அணை கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினாவிற்குண்டான விடை. பெரம்பலூர் தொகுதி, வேப்பந்தட்டை ஒன்றியம், மலையாளப்பட்டியில் உள்ள ஆயக்கட்டுப் பகுதிகள் ஏற்கெனவே நன்கு அபிவிருத்தி அடைந்துள்ளன. எனவே புதிதாக நீர்த்தேக்கம் கட்டுவதால்

கூடுதல் பயனேதும் இல்லை என்ற அடிப்படையில் சின்னமுட்லு அணை கட்டும் திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

திரு. ப. இராஜரெத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகத்தினில் பிறந்து ஜெகத்தினை ஆண்டுகொண்டிருக்கின்ற அன்னையை வணங்குகின்றேன். பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை ஒன்றியம், மலையாளப் பட்டியில் சின்னமுட்லு அணை கட்ட வேண்டும் என்பது, 40 ஆண்டுகளுக்கு மேலாக இப்பகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையாகவுள்ளது. இத்திட்டத்தினால் சின்னமுட்லு பகுதியிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப் போல அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகள் பயன்பட்டாலும்கூட, அந்த நீர்வரத்து முறைப்படுத்தப்பட்டு வரும் என்று சொன்னால் கிட்டத்தட்ட வழியோரக் கிராமங்கள், அதைத் தாண்டி கிட்டத்தட்ட வி.களத்தூர், தொழுதூர் வரை அந்த ஆற்றிலே இருக்கிற பாசனங்கள் முறைப்படுத்தப்பட்டு கிட்டத்தட்ட 5 ஆயிரம் ஏக்கருக்கு மேல் பயனடையக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வரும் ஆண்டிலாவது இத்திட்டத்தை நிறைவேற்றித் தர ஆவன செய்வார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை ஒன்றியம். மலையாளப்பட்டி கிராமத்தில், சின்னமுட்லூர் குக்கிராமத்தில் நீர்த்தேக்கம் மற்றும் கல்லாற்றில் அணைக்கட்டு கட்டுதல் ஆகியவை தற்போது கைவிடப்பட்டுள்ளது. மலையாளப்பட்டி கிராமம், சின்னமுட்லூர் குக்கிராமத்தில் நீர்த் தேக்கம் அமைக்க 1976 ஆம் ஆண்டு ஆய்வுக் கோட்டம், திருச்சியில், ரூ.165 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் தயார் செய்யப்பட்டது. அப்போதைய தலைமைப் பொறியாளர், ஆய்வு, சென்னை அவர்கள், இடத்தை தல ஆய்வு செய்து மேற்படி நீர்த்தேக்கத்தால் பயனடையும் ஆயக்கட்டுப் பகுதிகள் நன்கு அபிவிருத்தி அடைந்துள்ளதால் அங்கு புதியதாக நீர்த்தேக்கம் கட்டுவதால் கூடுதல் பயன் ஏதுமில்லை எனத் தெரிவித்து, மேற்கண்ட திட்டம் தேவையில்லை என கருத்து கூறியதால், திட்டம் கைவிடப்பட்டது. இதன்பின், மலையாளப்பட்டி கிராமத்தில் கல்லாற்றின் குறுக்கே புதிய ஏரி அமைக்கும் திட்டப் பணிக்கு அரசாணை எண் 197, பொதுப் பணித் துறை, எண் 2, நாள்

2002 ஏப்ரல் 18]

5-5-1997-ல் ரூ.310 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது. திட்டப் பணிகளுக்கு கீழ்ப்புறம் உள்ள அரும்பாவூர் ஏரி பாசன ஆயக்கட்டுதாரர்கள் தெரிவித்த கடும் ஆட்சேபம் காரணமாக இத்திட்டமும் அரசு மட்டத்தில் விவாதிக்கப்பட்டு, அரசாணை (நிலை) எண் *1236*, எண் *2/98-1*, நாள் *30-11-1998*-ல் மேற்கண்ட நிர்வாக ஒப்புதல் இரத்து செய்யப்பட்டு ஆணையிடப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 137, திரு. ப. ரங்கநாதன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.*

137—

தமிழ்மொழிப் பாடத் திட்டம்

***85—திரு. ப. ரங்கநாதன்**:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் செயல்படும் மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் தமிழ் மொழிப் பாடத் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பள்ளிகளில் *1* முதல் *5* ஆம் வகுப்பு வரை தமிழ் அல்லது தாய்மொழியைப் பயிற்று மொழியாகக் கொண்டுவந்து *19-11-1999*-ல் பிறப்பிக்கப்பட்ட அரசாணையை எதிர்த்து சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டதில் அவ்வாணையை இரத்து செய்து *20-4-2000* அன்று உயர் நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டது. இத்தீர்ப்பினை எதிர்த்து அரசால் உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி மனு தாக்கல் செய்யப்பட்டு விசாரணைக்காக நிலுவையில் உள்ளது.

திரு. ப. ரங்கநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கைத் தள்ளுபடி செய்துள்ளார்கள், உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ததாக அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுள்ளார்கள். அந்த வழக்கை எவ்வளவு கால கட்டத்திற்குள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS